International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 06 Issue: 02 April to June 2024 www.irjtsjournal.org

# சமகால இலங்கையின் அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் அதன் தாக்கமும்

தா. முகம்மது முபாஸ்

**ஆய்வுச் சுருக்கம்**

உலகில் பல நாடுகள் பொருளாதார நெருக்கடியில் உட்பட்டு மீண்டுவருகின்ற நிலையில் இலங்கை இன்னும் பொருளாதார நெருக்கடியினை விட்டு வெளியேற முடியாமல் தவிக்கின்றது. இதன் காரணமாக பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியிருப்பதுடன், இது தற்போதய அரசாங்கத்திற்கும் பொருளாதார துறைக்கும் சவாலை ஏற்படுத்தியுள்ளது. இதன்படி இலங்கை அண்மைக்காலத்தில் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வந்ததனால் நாடு முழுவதும் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதி பதிவியிலிருந்து அகற்றப்பட்டதுடன் அரசாங்கத்திலும் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான காரணங்களாக குடிமக்களுக்கு அத்தியவசியப் பொருட்கள் கிடைக்காத நிலை மற்றும் இலங்கையர்கள் பலர் வறுமைக்கு ஆட்பட்டனர். மருந்துகள் இல்லை, எரிபொருள் பிரச்சினை, முக்கியமான அறுவை சிகிச்சைகள் ரத்து செய்யப்பட்டதுடன் மருந்து கொள்ளவனவு செய்யமுடியாமை, டொலர் தட்டுப்பாடு, விவசாயத்துறை மற்றும் சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி, பணவீக்கம் அதிகரிப்பு, தினமும் மின்வெட்டு, அத்தியவசிய பொருட்களின் விலையேற்றம் முதலிய பல்துறை சார்ந்த தாக்கங்கள் கோவிட் தோற்று ஏற்படுத்திய தாக்கத்தினை விட அரசியல் பொருளாதார நெருக்கடி இலங்கையில் அதிக தாக்கங்களை ஏற்படுத்தியது. இலங்கையின் நிலைமை வெறும் பொருளாதார நெருக்கடியால் மட்டுமல்லாது அரசியல் நெருக்கடியாலும் ஏற்பட்டுள்ளது என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நெருக்கடி எப்படி உருவானது, இலங்கை அரசியல் பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட தாக்கங்களை கண்டறிதல் மற்றும் இந்த நெருக்கடியினை தீர்ப்பதற்கான பரிந்துரைகள் முன்வைத்தல் போன்றவற்றுக்கு பதிலளிப்பதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். மேலும், கட்டுரையின் பற்றிய ஒரு விரிவான பகுப்பாய்வையும் கோடிட்டுக் காட்டுவதற்காக இரண்டாம் நிலைத்தரவுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள் :** பொருளாதார நெருக்கடி, இலங்கை, கோவிட் தோற்று, அரசியல் பொருளாதார நெருக்கடி

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR 

## ஆய்வு அறிமுகம்

உலகிலுள்ள பல நாடுகளின் அரசியல் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தனை கோவிட் 19 பெரும் தொற்று ஏற்படுத்தின. அந்த நாடுகளின் வரிசையில் இலங்கையும் இடம் பிடித்துக் கொண்டதன் விளைவாக அண்மைக்காலத்தில் இலங்கையிலும் அரசியல் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது ஆயினும் இலங்கை நாடானது ஆரம்ப காலம் முதல் பல்வேறுபட்ட அரசியல் பொருளாதார நெருக்கடிகளை கடந்து வந்தே இருக்கின்றது. சமகாலத்தில் இலங்கையானது தனது வரலாற்றில் என்றுமில்லாத அளவிற்கு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான ஸ்திரமற்ற தன்மையிலிருந்து நாட்டை எவ்வாறு மீட்டெடுப்பது என்பது எம்மவர் மத்தியிலுள்ள மிகப் பெரிய கேள்வியாகும் (Bhavan et al., 2023). இருப்பினும் இலங்கை சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர் எதிர் கொள்கின்ற பாரிய நெருக்கடியாகவே 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னரான இவ் அரசியல் பொருளாதார நெருக்கடியை குறிப்பிட்டுக் காட்டுகின்றனர். 1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதில் இருந்து தற்போது வரை பல்வேறு அரசியல் நெருக்கடிகள் தோன்றியிருக்கின்றன. ஆனால், 1956 மற்றும் 1970 - 1977ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் சில நடைபெற்றிருக்கின்றன. ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் பொருளாதார நெருக்கடி போன்று முன்பு ஏற்பட்டதில்லை. இது ஒரு கடுமையான, ஆபத்தான சூழலாக காணப்படுகின்றது (Bhavan et al., 2023). இதன் விளைவாக பல சவால்களை இலங்கை ஏற்கவேண்டி ஏற்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமான விடயங்களினை அவதானிக்க வேண்டியது முக்கியமாகும். அந்த வகையில் அரசியல் ஸ்திரமின்மை, நாட்டில் நீண்டகாலமாக நிலவுகின்ற அமைதியின்மை, கொவிட் தொற்று நோயின் சர்வதேச ரீதியான பரவல், சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட சரிவு, நிதி கையாளலில் ஏற்பட்ட முறைகேடுகள், வரி விதிப்புக் கொள்கைகள், மோசமான நாணய இருப்பு, ஊழல், மிகைப் பணவீக்கம், கறுப்புச்சந்தை, குறைந்த ஏற்றுமதி, குறைந்த உற்பத்தி நிலை, ரஷ்ய– உக்ரேன் யுத்தம் மற்றும் பொதுமக்களின் பொறுப்பற்ற தன்மை ஆகியவற்றை குறிப்பிடலாம் (Bhavan et al., 2023). அவற்றில் மின்சார பற்றாக்குறை, வரவுசெலவுத்திட்ட பிரச்சினை, தொடர்ந்து வந்த உள்நாட்டு குழப்பங்களும் சிவில் யுத்தமும் 2019 ஆம் ஆண்டு கோரோனாவினைத் தொடர்ந்து அரசியல் பொருளாதார நெருக்கடியினையும் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக இலங்கை அரசாங்கத்தினை நிலையாகவும் பொருளாதார செயற்பாடுகளை சரியாகவும் நெறிப்படுத்த முடியாமல் பல்வேறு வகையில் அல்லோளப்பட்டது இவ்வாறான நெருக்கடிகள் மூலமாக சாதாரண மக்களே அதிகம் பாதிக்கபட்டனர். ஆயினும் 2019 ஆம் ஆண்டின் பின்னரான நெருக்கடியின் மூலமாக அரசியல் ரீதியான பிரச்சனைகள் ஏற்பட்டன அதிலும் குறிப்பாக 2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்களினால் கொண்டுவரப்பட்ட சில திட்டங்கள் முக்கியமானவையாகும். அவையாவன : வரியினை குறைத்தல், பணம் அச்சிடுதல், இரசாயன உரம்

இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டமை முதலியவையின் பாதக விளைவின் காரணமாக இதனை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்தனர் இதன் மூலமாக அரசாங்கம் கலைக்கப்பட்டு பாரிய சவால்களை இலங்கை நாடு எதிர் கொள்ளலாயின. குறிப்பாக அந்நிய செலவணி கையிருப்பு குறைந்தது, அத்தியவசிய பொருட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் இறக்குமதியில் பல தடைவிதக்கப்பட்டது, இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவடைந்து டோலரின் பெறுமதி அதிகரித்து, மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு அதிகமான மக்கள் பசி, பட்டினியால் வாடினர் இதனை காரணமாகக் கூறி குறித்த ஆட்சிக்கு எதிராக மக்கள் போரட்டமானது காலி முகத்திடலில் 100 நாட்களுக்கு மேல் நடைபெற்றது. அதன் பிற்பாடு அது ஒரு மக்கள் கிளர்ச்சியாக உருமாற்றப்பட்டு மக்கள் அதனை தொடர்ந்து ஊக்கப்படுத்தி ஆட்சினை கவிழ்த்து புதிய தலைவரினது ஆட்சியினை எதிர்பார்த்தனர். ஆரம்பத்திலே பொருளாதார நெருக்கடி ஒன்று தோன்றியது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடி பொருளாதார நெருக்கடியினை மேலும் துரிதப்படுத்தியிருக்கின்றது. கையறு நிலையில் இருக்கின்ற ஒரு ஜனாதிபதி, தனக்கென பாராளுமன்ற பலத்தினைக் கொண்டிராத பிரதமர் மற்றும் அதிக பாராளுமன்ற ஆசனங்களைக் கொண்டிருக்கின்ற கட்சி என்கின்ற அடிப்படையில் ஒரு முக்கோண திரிநிலையில் அரசாங்கம் உள்ளது. தற்போது உள்ள அரசாங்கம் கூட நிலையான அரசாங்கம் அல்ல. எனவேதான் அரசியல், பாராளுமன்ற உறுதிப்பாட்டை காணமுடியாமல் உள்ளது. இத்தகைய சூழல் பொருளாதார நெருக்கடியினை மேலும் வலுவூன்றச் செய்துள்ளது (Bhavan et al., 2023). அந்த வகையில் 2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டாபய அரசாங்கத்தின் மூலமாக நாடு எதிர்கொண்ட சவால்கள் பற்றி அறிதல், 2019 ஆண்டிற்கு பின்னர் ஏற்பட்ட அரசியல் பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களை அடையாளப்படுத்துதல், இந்த நெருக்கடியினால் பிரதானமான அரசியல் பொருளாதார துறைகளில் ஏற்பட்ட தாக்கம் மற்றும் விளைவுகளை விவாதித்து வெளிக்கொண்டுவருதல், நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியினை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்திட்டங்கள் மற்றும் ஆட்சி மாற்றத்தின் மூலமாக மக்களின் எதிர்பார்ப்பு மீள உருவாக்கப்பட்ட வேண்டும் என்பன பற்றி அறிதல் முதலிய பல நோக்கங்களை வெளிப்படுத்தி, இவற்றினை அறிந்து கொள்வதனை அடிப்படையாகக் கொண்ட இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது.

## கலந்துரையாடலும் முடிவும்

### அரசியல் பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள் ஓர் சுருக்கப் பார்வை

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டது. இந்த காரணங்களே அரசியல் பொருளாதாரத்தில் பல்வெறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது அதனை அடையாளப்படுத்தும் வகையிலேயே இக்கட்டுரை முன்னொக்கி கொண்டு செல்லப்படுகின்றது. இருப்பினும் இவ் அரசியல் பொருளாதார நெருக்கடியிக்கான பல


© 2024, IRJTSR

காரணங்கள் கூறப்படுகின்றன அவையாவன: அரசாங்கத்தில் உறுதியற்ற தன்மை, அரசாங்கத்தின் பிழையான கொள்கைத் தீரமானங்கள், நாட்டில் நீண்டகாலமாக நிலவுகின்ற அமைதியின்மை, கொவிட் தொற்று நோயின் பரவல், பொதுமக்களின் பொறுப்பற்ற தன்மை, சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட சரிவு, நிதி கையாளலில் ஏற்பட்ட முறைகேடுகள், வரி விதிப்புக் கொள்கைகள், மோசமான நாணய இருப்பு, ஊழல் மற்றும் இலஞ்சம், மிகைப் பணவீக்கம், கறுப்புச்சந்தை, குறைந்த ஏற்றுமதி, ரஷ்ய – உக்ரேன் யுத்தம், உர இறக்குமதியினைத் தடுத்தமை, அரசாங்கத்துறையில் அதிகளவு வேலைவாய்ப்புக்களை வழங்கியமை, பணம் அச்சிடலை மேற்கொண்டமை, வெளிநாட்டு ஒதுக்கங்களை சிறந்த முகாமைத்துவம் செய்யாமை போன்றவைகளே இலங்கையின் நிலை மோசமடைவதற்குரிய காரணங்களாகும். இந்த அடிப்படையில் இப்பொருளாதார நெருக்கடியானது அரசியல் பொருளாதார ரீதியில் பல தாக்கத்தினை ஏற்படுத்தி பரிணமித்தது அவற்றினை பின்வரும் தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கலாம்.

## பொருளாதார நெருக்கடியின் அரசியல் தாக்கம்

2022இல் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியானது உண்மையில் அரசியல் காரணிகளால் தூண்டப்பட்டு உருவான பொருளாதார நெருக்கடியாகும். இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து எதிர்கொண்ட இரட்டைக்குறைநிலை (Twin Deficit) என்ற நோயினை இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசியல்வாதிகள் ஆரம்பத்திலேயே இனங்கண்டு அதற்குத் தீர்வுகாமையாலும் தங்களினுடைய சுயலாபத்திற்காக அவர்கள் கடைப்பிடித்த பிழையான கொள்கைத் தீர்மானங்களாலும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், கொவிட்-19 போன்ற பொருளாதார அதிர்ச்சிகள் ஏற்பட்டதும் அதிலிருந்து இலங்கையால் இலகுவில் மீண்டுவரமுடியாமல் போய்விட்டது (Bhavan et al., 2023). இலங்கையைப் பொறுத்தவரை 2015 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேனா அவர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி அடைந்தார். அதன் பின்னர் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து கூட்டரசாங்கம் ஒன்றை உருவாக்கியது. அதனை நல்லாட்சி அரசாங்கமாக அடையாளப்படுத்தி ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கிடையில் ஏற்பட்ட உள்ளக முரண்பாடு ஆட்சி முறையில் பல நெருக்கடியினை ஏற்படுத்தியது. அதன் பிற்பாடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா ரணிலினை பிரதமப்பதவியிலிருந்து நீக்கி மகிந்தவை பிரதமராக நியமித்தமை அச்சூழ்நிலையில் அரசியலமைப்பு நெருக்கடியினை ஏற்படுத்தியதுடன் அவ்வாறே ஈட்டர் தாக்குதல் நாட்டின் பாதுகாப்பு நிலையில் பல்வேறு வகையான அதிருப்தியை ஏற்படுத்தியது இதனை அடுத்து வந்த ஜனாதிபதித் தேர்தல் அதிக மாற்றத்தினை ஏற்படுத்த காரணமாக இருந்தது. இதனால் ஆரம்ப காலங்களில் இலங்கை பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமையினை எதிர் கொண்டிருந்தாலும் அது கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு பாரிய நெருக்கடியாக உருமாறுவதற்கு அரசியல் ரீதியான கண்ணோட்டத்தில்

முக்கிய திருப்பு முனையாக அமைந்தது 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலும், 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலுமாகும். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் ஏற்படும்போது மூன்று தடவைகள் ஒருவர் ஜனாதிபதியாகப் பதவிவகுப்பதற்கு 19ஆவது அரசியல்யாப்புச் சீர்திருத்தத்தின்படி அனுமதி கிடையாத காரணத்தால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள் தன் குடும்பத்திலிருந்து ஒருவரை நிலைநிறுத்தவேண்டியேற்பட்டது (Bhavan et al., 2023). அதன் காரணமாகவே ஜனாதிபதி வெட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷவை பரிந்துரைத்தனர் இதிலும் குறிப்பாக இலங்கையின் பாதுகாப்பு விடயங்களை கவனத்தில் கொள்ளும் ஆட்சியாளர் அவசியம் என்பதனை எதிர்பார்த்த மக்களால் 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி இடம்பெற்ற இலங்கையின் எட்டாவது ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளராகக் களமிறக்கப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ, அந்தத் தேர்தலில் 69 லட்சத்து 24 ஆயிரத்து 255 வாக்குளைப் பெற்று அமோக வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இவர் அண்னளவாக 52.25% அறுதிப் பெரும்பான்மை வாக்குப் பெற்று மக்களின் விருப்பத்தின் காரணமாக ஜனாதிபதியானார்.

மேலும், இவ்வாறே அடுத்து வந்த 2020 பொதத் தேர்தலிலும் வெற்றியை இக்கட்சியே பெற்று ஆட்சியை முழுமையாகக் கைப்பற்றியது. இதனை அடிப்படையாகக் கொண்டு பிரதமராக மஹிந்த ராஜபக்ச தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி ஆவதற்கு முன்னர், சர்வதேசத்தில் அவர் பற்றிய குற்றச்சாட்டுகளும் விமர்சனங்களும் இருந்தமையினால் அவர் ஜனாதிபதியானதன் பின்னர் உலக நாடுகளின் ஆதரவு இலங்கைக்கு கிடைக்கவில்லை என்பதோடு வெளிநாடுகளின் நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியவில்லை என்ற நிலையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்கள் மேற்கொண்ட பெருமளவிலான தூரநோக்கற்ற பிழையான கொள்கைத் தீர்மானங்களே இலங்கை எதிர்கொண்ட தற்போதைய நெருக்கடிக்குக் காரணமாகும். கோட்டாபய ராஜபக்ச அவர்கள் ஜனாதிபதிப் பதவியிலிருந்து ராஜினாமா செய்வதற்கு முன்னர் பலவருடகாலமாக அரசியல் அனுபவங்கொண்டு விளங்கிய, இரு முறை இலங்கையில் ஜனாதிபதியாவும் பலமுறை பிரதமராகவும் பதவிவகித்த அவரின் சொந்த சகோதரரான மகிந்த ராஜபக்சவின் ஆலோசனையைக் கூடக் கேட்கவில்லை என்பதை மகிந்த ராஜபக்ச ஒரு நேர்காணலின் போது கூறியிருந்தமை ஒரு ஆச்சரியகரமான உண்மையாகும். இது, கோட்டாபய ராஜபக்ச அவர்கள் மேற்கொண்ட பெரும்பாலான தீர்மானங்கள் அரசியல் ரீதியான ஆலோசனைகள் பெறப்படாமல் அவருடைய ஒரு குறுகிய வட்டத்திற்குள் இருந்து பெறப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களாக இருப்பதைக் காட்டுகின்றது. இவ்வாறு கோட்டாபய ராஜபக்ச அவர்கள் அரசியல் ரீதியான ஆலோசனைகள் எதுவும் இன்றி தான்தோன்றித்தனமாக மேற்கொண்ட கொள்கைத் தீர்மானங்களும் இந்நெருக்கடிக்கான காரணமாகும் (Bhavan et al., 2023). அவ்வாறான சூழ்நிலையில் வந்த கொட்டாபய அரசாங்கத்தின் முறையற்ற

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2024, IRJTSR

கொள்கைத் தீர்மானங்கள் மூலமாக இலங்கையில் பல திட்டங்கள் கொண்டுவரப்பட்டது அவையாவன: பாதுகாப்பு தொடர்பான செலவீனங்கள் அதிகரித்தமை, 100% இயற்கை விவசாயத்தை உருவாக்கும் நோக்கில் இரசாயணப் பசளைகள் மற்றும் கிருமிநாசினிகளின் இறக்குமதிக்கு முற்றாகத் தடை விதித்தமை, வரி வீதங்களைக் குறைத்தமை அதாவது ஏயுவு வரியினை 15% இலிருந்து 8% ஆகவும் பெருநிறுவன வரியினை (Corporate tax) 28% இலிருந்து 24% ஆகக் குறைத்தமை, இலங்கை பணம் அதிகளவு அச்சிடப்பட்டமை, இலங்கைப் பணத்தினை டொலராக மாற்றுவதற்கு நிர்ப்பந்தித்தமை போன்ற தூரநோக்கற்ற பிழையான கொள்கைத் தீர்மானங்கள் பொருளாதார நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தியதுடன் போன்ற அம்சங்கள் அரசியல் தாக்கத்திற்கும் காரணமாகவும் இருந்தது. அத்துடன் மகிந்த ராஜபக்சவினுடைய ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற தேவையற்ற அரசியலமைப்பு மாற்றங்கள், மகிந்த ராஜபக்சவினுடைய குடும்ப ஆட்சி, பாரிய ஊழல், மக்களின் தேவைகளையும் கருத்துக்களையும் கவனத்திலெடுக்காமை, எல்லாம் தங்களுக்குத்தான் சொந்தம் என்ற அடிப்படையிலான சுயநலமான நடத்தைகள் போன்றவையும் தற்போதைய நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும் எனவும் (Bhavan et al., 2023). எடுத்துரைக்கப்படுகின்றதனை அவதானிக்க முடிகின்றது. மேலும், சிறுபான்மை இன மக்களினுடைய பொருளாதார நலன்களை குறைக்கும் வகையிலான இனவாத அல்லது இனத்துவ விருப்பத் தெரிவுக் கொள்கைகளை (Ethnic Preference Policy) கோட்டாபய அரசாங்கம் உருவாக்கும் நோக்கில் சிறந்த முகாமைத்துவத்தை பயன்படுத்தியிருக்கின்றார்கள். இனத்துவம் ரீதியான கொள்கையின் விளைவால் சிறுபான்மை இனங்கள் பொருளாதார மற்றும் அரசியல் சார்ந்த நன்மைகளை அடைந்து கொள்வதில் பின்தள்ளப்பட்டனர். இதன் விளைவாக இனங்களுக்கிடையே நெருக்கடிகள் ஏற்பட்டு சமூக முரண்பாடு, இனங்களுக்கிடையிலான முரண்பாடு என்பன நாட்டில் பொருத்தமான பொருளாதாரக் கொள்கைகளை சிறப்பாக நடைமுறைப்படுத்தாமல் தடுத்த முக்கிய அம்சமாகும்.

இவ்வாறான பல பாதக செயற்பாடுகளின் காரணமாக கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக்காலம் முடிவடையும் முன்னரே இலங்கையில் வரலாறு காணாத மக்கள் எழுச்சி ஏற்பட்டது. ஜனாதிபதி, ஆட்சியாளர்கள் இராஜினாமா செய்ய வேண்டும் என்ற முழக்கம் வலுப்பெற்றது. அதிலும் குறிப்பாக 'கோட்டா கோ ஹோம்" என்ற முழக்கம் இலங்கையின் அனைத்து தரப்பினரிடமும், அனைத்து மொழிகளிலும் எதிரொலித்தது. இந்நெருக்கடியின் உச்சகட்டத்தில் போராட்டக்காரர்கள் அரசாங்கத்தின் கடும்போக்கை எதிர்த்து அவர்களைப் பதவியிலிருந்து விலகுமாறு கூறி முறைமை மாற்றத்தை வேண்டிப் (System Change) போராடினர். ஆனால், நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற இம் மக்கள் போராட்டமானது, அத்தியாவசியப் பொருட்களான உணவு, எரிபொருள், எரிவாயு, மருந்துப் பொருட்கள், பால்மா, உரம், வளமாக்கிகள் போன்ற பல அத்தியாவசியப் பொருட்களுக்கு காணப்படுகின்ற தட்டுப்பாடுகளாலும் அவற்றின் விலையில் ஏற்பட்ட உயர்வாலும் மக்கள் மத்தியில் விரக்தியேற்பட்டு உருவான போராட்டமாகவே இது ஆரம்பத்தில் விமர்சகர்களால் நோக்கப்பட்டது. பொருட்களுக்கு

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR 

தட்டுப்பாடான சூழ்நிலை நிலவும்போது அவற்றிற்கான கேள்வி அதிகரிக்கின்ற வேளையில் போராட்டமானது தீவிரமடைவதாகவும் மாறாக பொருட்களின் நிரம்பல் அதிகரிக்கும்போது போராட்டமானது வலுவிழப்பதாகவுமே ஆரம்பத்தில் உணரப்பட்டது. பின்னரே இவ்மக்கள் போராட்டமானது முறைமை மாற்றத்திற்கான (System Change) போராட்டமென போராட்டத்தின் இறுதிக்கட்டத்தில் உணரப்பட்டது (Bhavan et al., 2023). இருப்பினும் சில முதலாளித்துவ கட்சிகள் மக்கள் உணர்வோடு மாறுபட்டு பேசிவந்தாலும் மக்களின் போராட்டக் குரல் ஒவ்வொரு நாளும் வலிமையடைந்தது. இதன் விளைவாக முதலில் பிரதமர் மகிந்த ராஜபக்ச தனது பிரதமப்பதவியை ராஜினாமா செய்தார். ஆயினும் மக்கள் போராட்டத்தை அடக்கி ஒடுக்கவும், திசை திருப்பவும் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் சதித்திட்டங்களும் தோல்வியடைந்தது. அதிலும் குறிப்பாக காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள்மீது ராஜபக்சவின் ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதலை தொடர்ந்து பொதுமக்கள் திருப்பித் தாக்க தொடங்கினார்கள். ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச வீடுகள் உட்பட முக்கிய அரச பதவிகளில் உள்ள பலரின் வீடுகளும் எரிக்கப்படுவதும்; தாக்கப்படுவதுமான அச்ச சூழலல் காணப்பட்டது. இத்தொடரான மக்களின் செயற்பாட்டின் விளைவாக மக்கள் கிளர்ச்சி “அறகலய” போராட்டம் மே 9 ஒரு வன்முறைத் திருப்பத்தை எடுத்த பிறகு எதிரணி வரிசையில் இருந்து விக்கிரமசிங்கவை முன்னாள் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச பிரதமராக நியமித்தார். மே 9 அரசாங்கத்தினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட குண்டர்கள் கொழும்பு காலிமுகத்திடல் கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் மீது மேற்கொண்ட தாக்குதலை அடுத்து சுமார் 70 அரசாங்க உறுப்பினர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அன்றைய தினமே மகிந்த ராஜபக்சவும் பிரதமர் பதவியில் இருந்து விலகினார். ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் விக்கிரமசிங்கவின் வருகை ஒரு பிரதமரும் அமைச்சரவையும் இல்லாமல் தடுமாறிக்கொண்டிருந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கு உடனடியாக ஒருவித உறுதிப்பாட்டைக் கொடுத்தது. அரசாங்கம் உடனடியாக பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்திக்கொண்டிருந்தவர்கள் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றது குறித்து ஆவேசமடைந்த அதேவேளை வேறு தரப்பினர் குழப்பநிலைக்கு பதிலாக உறுதிப்பாடும் நடைமுறைச் சாத்தியமான ஆட்சிமுறையும் வரும் என்று நம்பினார்கள் ( ஜெகான் பெரேரா, 2022). அதற்கான போராட்டக்காரர்கள் நியாயமான சீர்திருத்த கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

மின்சார தட்டுப்பாடு, எரிபொருட்களின் தட்டுப்பாடு, விலைவாசி அதிகரித்தமை, வரிசையில் நிற்கும் மக்கள், அங்கேயே மரணமடைகிற துயரச் சம்பவங்கள் தொடர்ந்து ஏற்பட்டன. மக்கள் அதனைப் பொறுக்கமுடியாமல் வீதியில் இறங்கி அரசாங்கத்திற்கு எதிராகப் போராடினர். இது நாட்டில் வன்முறைகளையும் அமைதியின்மையையும் மற்றும் அரசியல் ஸ்திரமின்மையையும் உருவாக்கியதோடு மக்களினுடைய தீவிரப்போராட்டத்தின் வழியாக நாட்டின் பிரதமரும் ஜனாதிபதியும் பதவியை இராஜினாமா செய்யவும் தூண்டப்பட்டனர் (Bhavan et al., 2023). இதன் விளைவினால் கோட்டாவை வெளியேறக்கோரி 2022 ஏப்ரல் முதல் நாடு முழுவதிலும் போராட்டங்கள்

இடம்பெற்றன. ராஜபக்ச அரசாங்கம் நிர்வாகம் நெருக்கடி நிலையை எதிர்கொண்டது. இதன் மூலம், பொலிஸ் பொதுமக்களைக் கைது செய்வதற்கும், ஊரடங்கை விதிப்பதற்கும், சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், எதிர்ப்பாளர்களையும் பத்திரிகையாளர்களையும் தாக்குவதற்கும், இணைய ஆர்வலர்களைக் கைது செய்வதற்கும் இனுமதியளிக்கப்பட்டதனை அடுத்து பலர் கைது செய்யப்பட்டனர். ஆயினும் கோட்டாபய ராஜபக்ச தனது ஜனாதிபதி பதவி விலக மறுத்துவிட்டார். இந்த நிலையில் அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிராக மகிந்த ராசபக்சவின் ஆதரவாளர்கள் திட்டமிட்ட தாக்குதல்களை நடத்தியதன் பிரதியளிப்பே அமைதிப் போராட்டம் வன்முறையாக மாற்றமடைந்தது. துப்பாக்கிச் சூடு உத்தரவுகளுடன் அரசாங்கம் இராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு 2022 சூலை 13 திகதி கோட்டாபய இராணுவ விமானத்தின் ஊடாக நாட்டை விட்டு வெளியேறி மாலைத்தீவுகள் வழியாக சிங்கப்பூருக்குத் தப்பிச் சென்றார். அவர் இலங்கையில் இல்லாத வேளையில் ஜனாதிபதியின் பணிகளை கடமைகளை நிறைவேற்றுவதற்காக அப்போது பிரதமராக கடமையிலிருந்த ரணில் விக்கிரமசிங்கவை தற்காலிகமாக அரசுத்தலைவராக நியமிக்கப்பட்டார். இம்மக்கள் கிளர்ச்சியின் பிரதிபளிப்பினை கருத்திற் கொண்டு கோட்டாபய தனது பதவி விலகல் கடிதத்தை சிங்கப்பூரில் இருந்து அதிகாரப்பூர்வமாக 2022 சூலை 14 ஆம் திகதி அனுப்பிவைத்தார். இதன் பிற்பாடு சிங்கப்பூரில் 28 நாட்கள் தங்கியிருந்த முன்னால் ஜனாதிபதி கோட்டாபய 2022 ஆகத்து 11 ஆம் திகதி தாய்லாந்து நாட்டுக்கு சென்றார். பின்னர் கோட்டாபயவின் பாதுகாப்பை இலங்கை அரசு உறுதி செய்ததை அடுத்து அவர் மீண்டும் 2022 செப்டபம்பர் 2 ஆம் திகதி இரவு இலங்கைக்கு மீண்டும் திரும்பினார். மேற்கூறப்பட்ட விடயங்களை பார்க்கும் போது ஒன்றுபட்ட மக்கள் புரட்சியின் மூலமாக இறுதியில் போராட்டமானது வெற்றிபெற்றது. மக்களின் தீவிர போராட்டத்தின் மூலமாக ஜனாதிபதியும் பிரதமரும் பதவியினை இராஜினாமாச்செய்து பதவியிலிருந்து விலகினார்கள். அதனைத்தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கோட்டாபயவைத் தொடர்ந்து அடுத்து ஜனாதிபதியாகப் பதவியை ஏற்றுக்கொண்டார். உண்மையில் ரணில் விக்கிரமசிங்க அவர்களை ஜனாதிபதியாக்கியமைக்குப் பல காரணங்கள் உள்ளன. அதாவது ரணில் விக்கிரமசிங்க அவர்கள், ராஜபக்ச குடும்பத்தினுடைய நண்பர் என்பதால் சட்டரீதியாகவும், சமூகரீதியான பிரச்சினைகளிலிருந்தும் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையாகும். ராஜபக்ச குடும்பத்திற்கு வெளியிலிருந்து ஒரு உறுப்பினரைக் கொண்டுவரும் அளவிற்கு மகிந்த ராஜபக்ச எந்த உறுப்பினர் மீதும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை மற்றும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருப்பாராகவிருந்தால் ராஜபக்ச குடும்பத்தினால் தொடர்ந்தும் பொதுஜனப் பெரமுனவைக் கட்டுப்படுத்தக்கூடிய வாய்ப்பிருக்கும் (மாறாக டளஸ் அழகப்பெரும ஜனாதிபதியாக வந்தால், தற்போதைய பொதுஜனப் பெரமுன டளஸ் அழகப்பெருமவினுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். அதன் காரணமாகவே பொதுஜனப் பெரமுன, டளஸ் அழகப்பெருமவிற்கு வாக்களிக்கவில்லை போன்றனவே உண்மையான காரணங்களாகும். மறுபுறம் தற்போது ஜனாதிபதியாக உள்ள ரணில் விக்கிரமசிங்கவும் 2020ஆம் ஆண்டுப்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR 

பொதுத்தேர்தலில் பாரிய வெற்றியீட்டி அறுதிப்பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த பொதுஜனப் பெரமுனவினை இலகுவில் ஆட்சியிலிருந்து கலைக்க முடியாததால் அவர்களின் (SLPP) செல்வாக்கிற்கு உட்பட்டு அவர்களோடு இசைந்து நடக்கவேண்டிய போக்கும் காணப்படுகின்றது (Bhavan et al., 2023). இன்றைய நிலையில் பொருளாதார ரீதியான நெருக்கடியினை ஏற்படுத்த காரணமாக இருந்த அரசியல் ரீதியான தாக்கமும் செயற்பாடுகளும் இலங்கை அரசியலில் ஒரு திருப்புமுனையாகவும் வரலாற்று நிகழ்வாகவும் நடந்து முடிந்துள்ளது.

**பொருளாதார நெருக்கடி முக்கிய பொருளாதாரத் துறைகளில் ஏற்படுத்திய தாக்கம்**

உலகளாவிய கொரோனா தொற்றுப் பரவலால் பெரும்பாலான உலக நாடுகளின் பொருளாதாரங்கள் பாதிக்கப்பட்டதைப் போன்று இலங்கையின் பொருளாதாரமும் பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்தது. குறிப்பாக நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி, பண உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சல்கள், உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு என்பன பாதிப்பிற்குள்ளாயின. அத்துடன் அளவுகடந்த பொதுப்படுகடன் சுமையினாலும் பாரிய டொலர் கையிருப்பு வீழ்ச்சியினாலும் அப்பிரச்சினையிலிருந்து மீண்டெழ முடியாதளவிற்கு பாரிய நிதி நெருக்கடி நிலைமையை இலங்கை முகங்கொடுத்துள்ளது (Bhavan et al., 2023). இதன் விளைவாக பல்வேறுபட்ட பொருளாதார தாக்கங்களை இந்நெருக்கடியினால் எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளது. இவ்வாறு எதிர்கொண்டு வருகின்ற பொருளாதார ரீதியிலான தாக்கங்களை பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்த முடியும்.

வெளிநாட்டு ஒதுக்குகளின் கையிருப்பில் ஏற்பட்ட தாக்கம் :- பொருளாதார நெருக்கடி பல உலக நாடுகளை தாக்கியிருந்தாலும் அந்த நாடுகளினால் மீண்டெழ முடிந்துள்ளது. அயினும் இலங்கையால் இத்தாக்கத்திலிருந்து மீள முடியாமல் பல சவால்களை எதிர் கொள்கின்றது. ஏனைய நாடுகளில் வெளிநாட்டு ஒதுக்கினுடைய பங்களிப்பு காணப்பட்டுள்ளன அதன் காரணமாக அந்த நாடுகள் கோரோனா தாக்கத்தாலேற்பட்ட பொருளாதாரப் பாதிப்பிலிருந்து தங்கள் நாடுகளின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. ஆனால் இலங்கையானது அப்பிரச்சினையிலிருந்து மீண்டெழ முடியாமலிருப்பதற்கு பலவீனமான வெளிநாட்டு ஒதுக்கு ஒரு முக்கிய காரணமாகக் கருதப்படுகின்றது. உண்மையில் வெளிநாட்டு ஒதுக்குகள், ஒரு நாடானது நெருக்கடி நிலையில் இருக்கும் போது அந்நாட்டை மீட்டுக்கொண்டுவருவதற்கான ஒரு காப்பு நிதிமூலமாகவும் (Back-up Funds), பொருளாதார அதிர்ச்சியை தாங்கிக்கொள்ளும் சக்தியாகவும் (Shock Absorber). ஒரு நாடு வெளிநாட்டு ஒதுக்குகளை போதியளவு கொண்டிருக்கும் பட்சத்தில் அந்நாடானது கொரோனாத் தொற்றுப் பரவல் போனற் பொருளாதார அதிர்ச்சிகளை எதிர்கொண்டாலும் பொருளாதார நெருக்கடி நிலைமைக்குள் தள்ளப்படாமல்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR 

அந்நிலைமையிலிருந்து மீண்டெழும் உத்வேகத்தைக் கொண்டிருக்கும். அவ்வாறான நாடுகளுக்கு உதாரணமாக சீனா, சிங்கப்பூர், ஜப்பான் (Bhavan et al., 2023). முதலிய பல நாடுகள் தற்போதய நிலையில் தங்களை மீள உருவாக்கியுள்ளதனை அவதானிக்க முடிகின்றது ஆயினும் இலங்கையானது 2018ஆம் ஆண்டுத் தரவுகளின்படி 195 உலக நாடுகளில் 123வது இடத்தில் பலவீனமான வெளிநாட்டு ஒதுக்குகளைக் கொண்ட நாடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இலங்கையானது ஏனைய ஆசிய நாடுகளிலும் பார்க்க பலவீனமான வெளிநாட்டு ஒதுக்குகளின் கையிருப்பினைக் கொண்டுள்ளது. 2018 இல் 9.9 பில்லியன் டொலராகக் காணப்பட்ட இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்குகள் 2022 மார்ச் மாத அறிக்கையின் படி 2 பில்லியன் டொலராக மாத்திரமே காணப்பட்டது. தற்போது அது பூச்சிய நிலையை அடைவது மிகவும் பாரதூரமான விடயமாகப் பார்க்கப்படுகின்றது (Bhavan et al., 2023). இங்கு கொரோனாத் தொற்று ஏற்படுவதற்கு முன்னரிருந்தே இலங்கையானது ஏனைய நர்டுகளுடன் ஒப்பிடும் போது பலவீனமான வெளிநாட்டு ஒதுக்கினை கொண்டிருந்தது அத்துடன் இப்பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதன் பின்பு வெளிநாட்டு ஒதுக்கானது வீழ்ச்சியடையத் தொடங்கியது என்பதனையும் அறியமுடிகின்றது.

இலங்கை சர்வதேச வர்த்தக இறக்குமதிச் செலவில் ஏற்படுத்திய தாக்கம் :-
இலங்கையானது பல தரப்பட்ட பொருட்களை ஏற்றுமதியினையும் இறக்குமதியையும் செய்யும் இந்து சமூத்திரத்தின் பிரதான நாடாகும். இந்தவகையில் இலங்கையில் ஏற்பட்ட யுத்த நிலைமை அதனோடு தொடர்ந்த பெரும் தொற்று சர்வதேச வர்த்தகத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தியதுடன் ஏற்றுமதியினை வீழ்ச்சியடையச் செய்து இறக்குமதியின் செலவினை அதிகரிக்க காரணமாக இருந்துள்ளது. இதன் அடிப்படையில் சர்வதேச வர்த்தகத்தில் இலங்கையின் நிலையினைப் பார்க்கின்றபோது 2020ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி 11,741 மில்லியன் ஐ.அ.டொலராகவும் மொத்த இறக்குமதி 21,316 மில்லியன் ஐ.அ.டொலராகவும் காணப்பட்டது. ஆகவே, இலங்கையானது மொத்த இறக்குமதியோடு ஒப்பிடும் போது ஏறத்தாழ 50 சதவீதத்தினையே ஏற்றுமதி செய்வது புலனாகின்றது. இலங்கையானது அண்ணளவாக 3,121 பொருட்களை 198 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதோடு 4,246 பொருட்களை 195 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றது. மேலும் 2020ஆம் ஆண்டு மத்தியவங்கி ஆண்டறிக்கையின்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி 16.58 வீதமாகவும் மொத்த இறக்குமதி 22.94 வீதமாகவும் காணப்படுகின்றன. இங்கு குறிப்பிடத்தக்க முக்கிய விடயம் என்னவெனில் ஏற்றுமதி பொருட்களிலும் பார்க்க இறக்குமதி செய்யும் பொருட்களின் அளவு அதிகமாக காணப்படுகின்றது. இதனால் ஏற்றுமதி வருமானத்தைக் காட்டிலும் இறக்குமதிச் செலவு அதிகரித்து வர்த்தக மீதி பற்றாக்குறையாகவுள்ளது. இவ்வர்த்தகப் பற்றாக்குறையானது 2022ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் - 762 மில்லியன் ஐ.அ.டொலராக எதிர்க்கணியத்தில் காணப்படுகின்றது. இது பெரும்பாலான ஆசிய நாடுகளை விடவும் இலங்கை மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படுவதனைக் காட்டுகிறது (Bhavan et al., 2023). ஆகவே

இலங்கையில் ஏற்றுமதி வருமானத்தினை விட இறக்குமதிச் செலவு இப்பொருளாதார நெருக்கடியினால் பொருளாதாரத்தில் தாக்கத்தனை பிரதிபளித்துள்ளது.

இலங்கையின் வரி முறைமை மறுசீரமைப்பு மூலம் ஏற்பட்ட தாக்கம்: இலங்கையினை பொறுத்தமட்டில் பொருளாதார நெருக்கடியினை மேலும் உக்கிரப்படுத்திய காரணி வரிமுறையில் மேற்கொண்ட மறுசீர்திருத்தமாகும்;. பொதுவாக வரிமுறைமை என்பது வினைத்திறனாக, நியாயத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படும். ஆயினும் இவ்வாறான நிலை இலங்கையில் சாத்தியமானதாகவுள்ளதாக என்பது இன்றைய நிiலையில் கேள்விக்குறியே. தற்போது இலங்கையின் வரி வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக மிக மோசமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது இந்த நிலையினை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் வரிவீதம் படுமோசமாக் வீழ்ச்சியடைந்த நிலைமைய அடையாளப்படுத்துகின்றது. மேலும் இலங்கையின் வரிவருமானத்தினை எடுத்துக் கொண்டால் அது ஆரம்பத்தில் 19%ஆக இருந்து படிப்படியாக வீழ்ச்சி கண்டு இன்றைய நிலையில் இலங்கையின் வரிவீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக படுமோசமாக வீழ்ச்சியடைந்து 2021இல் 7.7% எனும் நிலையினை அடைந்துள்ளது (Bhavan et al., 2023). இதற்கு காரணகருத்தாவாக எடுத்துரைக்கப்படுவது யாதெனில் இலங்கையின் அரசாங்கம் தற்பொழுது வருமான வரியினை 24%இலிருந்து 18% வீதமாக குறைத்தமையும் இலங்கையின் வரிவருமானம் வினைத்திறனற்றுக் காணப்படுவதற்கு காரணமாக (Bhavan et al., 2023) கூறப்படுகின்றது. இதன் படி கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் குறைக்கப்பட்ட வரி, உதாரணமாக பெறுமதிசேர் வரி (VAT) 15%இலிருந்து 8%ஆக குறைப்பு செய்யப்பட்டது. இதனால் அரசாங்கத்திற்கு 215 பில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டது. அடுத்து தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) இல்லாமல் செய்யப்பட்டது. இதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு 71 பில்லியன் ரூபாய் ஆகும். உழைக்கும் போதே வரி செலுத்துதல் (Pay as you earn) நீக்கப்பட்டு மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு 41 பில்லியன் ரூபாவாகும். பொருளாதார சேவை வரி இல்லாமல் செய்யப்பட்டது. இதனால் 53 பில்லியன் வரிவருமானம் இழக்கப்பட்டது. நிறுத்தி வைத்தல் வரி (WHT) இல்லாமல் செய்யப்பட்டது. இதனால் இழக்கப்பட்ட வருமான இழப்பு 46 பில்லியன் ஆகும். கூட்டுறவு வருமான வரி (Cooperative Income Tax) 24%இலிருந்து 18%ஆக குறைக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட இழப்பு 60 பில்லியன் ரூபாய் ஆகும். தொலைத் தொடர்பாடல் விதிப்பனவுகள் (Telecommunication Levy) இல்லாமல் செய்யப்பட்டன. இதனால் 14 பில்லியன் இழப்பு ஏற்பட்டது. இவ்வாறாக 500 - 700 பில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக 3 - 4 வீதமாக இருக்கக்கூடும் (Bhavan et al., 2023). இலங்கையின் கோட்டாபய ஜனாதிபதியின் பாரிய வரிக் குறைப்புக் கொள்கையினால், அரசாங்க வருமானம் மற்றும் நிதிக் கொள்கைகள் பாரிய அளவில் பாதிக்கப்பட்டன இதன் காரணமாக இலங்கையில் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைகள் அதிகபடியாக ஏற்பட்டது

என்பது இக்காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடிக்கு பிரதான விடயமாக காணப்பட்டுள்ளன.

இலங்கை விவசாயத்துறையில் ஏற்பட்ட தாக்கம் :- 2021 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் மற்றுமொரு தவறைச் செய்தது. அதாவது அனைத்து கனிம உரங்கள் மற்றும் விவசாய இரசாயன உரங்களை தடைசெய்ததாக அறிவித்தமையாகும். அதன் காரணமாக இயற்கை விவசாயத்தை மட்டுமே இலங்கை அனுமதிக்கும் என அறிவித்தல் விடப்பட்டது. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச, இலங்கையில் இயற்கை விவசாயத்தை 100 சதவீதம் உருவாக்கும் நோக்குடன் இரசாயணப் பசளைகளின் இறக்குமதிக்கு முற்றாகத் தடைவிதித்ததன் காரணமாக உரங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு அவற்றின் விலை அசாத்தியமாக மிகவும் உயர்வடைந்ததால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் கூட கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகள் பாதிக்கப்பட்டாலும் விவசாயத்துறை ஓரளவுக்கு முன்னேற்றகரமான நிலையில் இருந்தது. ஆனால், இரசாயண உரங்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மேற்கொண்ட தவறான கொள்கைத் தீர்மானங்களால் விவாசாய உற்பத்தியானது மோசமாகப் பாதிக்கப்பட்டு உற்பத்தித் திறன் குறைவடைந்து விவசாயிகள் பாரிய நட்டத்தைத் தழுவினர். ஏனெனில் இலங்கையிலுள்ள விவசாய நிலங்கள் இரசாயண உரப் பாவனைக்கு அதிகம் பழக்கப்பட்டமையினால் விரைவாக இரசாயண உரங்களின் இறக்குமதிக்கு தடையேற்பட்டு இயற்கை உரங்களை பாவிக்க முற்பட்டவேளையில் எதிர்பார்த்த விளைச்சலைத் தரவில்லை. இதனால் விவசாயத்துறையில் உற்பத்தி குறைவடைந்தது. எனவே, விவசாயிகளுக்குத் தேவையான உரத்தைப் பெற்றுக்கொடுப்பது, விவசாயத்திற்கு உகந்த சூழலையும் அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுப்பது போன்றவற்றினூடாக நீண்ட காலத்தில் விவசாய உற்பத்தியில் தன்னிறைவை ஏற்படுத்திக்கொள்ள முடியும் (Bhavan et al., 2023). இருப்பினும் இக்கொள்கை திட்டத்தின் காரணமாக விவசாயத்துறை பாரிய வீழ்ச்சியினை எதிர்கொண்டதுடன் விவசாயிகளுக்கு பாரிய நட்டத்தினையும் உருவாக்கியது.

பணத்தை அச்சிட்டு வெளியீட்டமையினால் ஏற்பட்ட தாக்கம் :- இலங்கை அரசாங்கத்தின் தேவைகருதி பணமானது மத்திய வங்கியால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்ற முறைமையே இலங்கையில் காணப்படுகின்றது. இருப்பினும் இலங்கையானது நெருக்கடியான சூழ்நிலையில் அதிகளவிலான நாணயத்தை அச்சிட்டு சந்தைக்கு விட்டது. ஏனெனில் அரசாங்கத்தினுடைய வரவுசெலவுத்திட்ட குறைநிலையினையும் அரசசெலவுகளையும் ஈடுசெய்வதற்காக ஒரு வழிமுறையாகவே அச்சிடப்பட்ட நாணயத்தைப் இலங்கை அரசாங்கம் பயன்படுத்தியது. இவ்வாறு அதிகபடியான பணத்தை அச்சிட்டு பாதீட்டுப் பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்ய முயற்சிக்கும் வேளையில் அது எப்படிப்பட்ட

விளைவினை இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் என்பது பற்றி ஆராய மறந்து விட்டனர். அதன் பிரதான விளைவு யாதெனில் பணத்தை அதிகளவு அச்சிடும்போது பொருட்கள் சேவைகளுக்கான மொத்தக் கேள்வியும் அதிகரித்து அதன் காரணமாக பொருட்களின் விலை அதிகரித்து காலவோட்டத்தில் பணவீக்கத்தையும் ஏற்படுத்தும். இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த பல அரசாங்கங்கள் தொடர்ச்சியாகக் குறைநிலை வரவுசெலவுத்திட்டக் கொள்கையினையே அமுல்படுத்திவருகின்றனர். அதாவது அரச வருமானத்தை விடச் செலவு அதிகமாகக் காணப்படுகின்ற போது துண்டுவிழும் தொகை ஏற்படுகின்றது. அத்துண்டு விழும் தொகையை நிதியீட்டம் செய்வதற்கான ஒரு வழிவகைதான் பணத்தை அச்சிடுவதன் மூலமாக மத்திய வங்கி அரசாங்கத்திற்கு கடன் வழங்குகின்ற நடைமுறையாகும் (Bhavan et al., 2023). இதனால் பொருட்களின் விலை அதிகளவில் உயர்ந்து பணவீக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாய் மாறிவிடும். கடந்த மே மாதம் இலங்கையின் பணவீக்க வீதம் 40% என உத்தியோகபூர்வமாகக் கூறப்பட்டாலும் சர்வதேச கணிப்பீடுகளின்படி பார்க்கின்ற போது உண்மையில் இலங்கையின் பணவீக்கம் 100 வீதத்தை கடந்துவிட்டதென உலகளாவியரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிஞர்கள் இது தொடர்பில் கருத்துரைத்துள்ளார்கள். மேலும், பணவீக்கமானது 40%இற்கு மேல் இனிவரும் மாதங்களில் உயரலாம் என மத்தியவங்கி கூறினாலுங்கூட சந்தையில் இருக்கின்ற ஏனைய பணவீக்க மாற்று வகைகளை நாம் எடுத்துப்பார்க்கின்ற போது இது பலமடங்கு கூடுதலான ஒரு வீதமாகக் காணப்படுகின்றது (Bhavan et al., 2023). ஆகவேதான் 2021இல் 6.7சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் ஏப்ரலில் 29.5சதவீதமாகி ஆசியாவின் மிக உயர்ந்த பணவீக்கத்தை பதிவுசெய்துள்ளது (சறோஜினி, 2022).

இதனை தரவுகளின் அடிப்படையில் நோக்கும் பொது இலங்கையில் கடந்த காலங்களில் அச்சிட்டு வெளியிடப்பட்ட பணத்தை 2019ஆம் ஆண்டிலிருந்து பார்த்தோமேயானால் 2019ஆம் ஆண்டில் மட்டும் 505 பில்லியன் இலங்கை ரூபாய் அச்சிட்டு வெளியிடப்பட்டன. இது தொடர்ந்து 2020ஆம் ஆண்டில் 650 பில்லியன்களாகக் காணப்பட்டு 2021ஆம் ஆண்டிலே 1.2 ரில்லியன் ரூபாய்களாக பாரியளவில் அதிகரித்திருக்கின்றது. இங்கு அவதானிக்கத்தக்க முக்கிய விடயம் என்னவெனில் கடந்த மூன்று வருடங்களில் இலங்கை ரூபா மில்லியன் கணக்கில் அச்சிடப்படுகின்ற நிலைமை மாறி ரில்லியன் கணக்கிலே பணமானது அதிகளவில் அச்சிடப்படுகின்ற ஒரு போக்கு காணப்படுகின்றது (Bhavan et al., 2023). இதன் காரணமாக இலங்கையில் பணவீக்கமே உக்கிரமடைந்தது ஆகவே இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இலங்கை ரூபாவை அச்சிட்டு வெளியிட்டு இலங்கை அரசாங்கத்தினுடைய கடனை தீர்க்க முற்படும்போது உள்நாட்டுக் கடனை வேண்டுமானால் இலங்கை ரூபாவைக் கொண்டு தீர்த்தாலும் வெளிநாட்டுக் கடனை இவ் உள்நாட்டு பண அலகைக் கொண்டு தீர்க்க முடியாது. ஏனெனில் இலங்கை ரூபாவானது சர்வதேச ரீதியான கொடுக்கல் வாங்கல்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வன்நாணயமன்று. இவ்வாறு வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்துவதற்காக ரூபாவினை அதிகளவு அச்சிட்டு சந்தைக்கு

வழங்குகின்ற பட்சத்திலே அந்த ரூபாவினுடைய அளவு அதிகரிக்கின்ற சமமான அளவினால் அல்லது அதனைவிடக் குறைந்த அளவினால் டொலருடைய பெறுமதி அல்லது வெளிநாட்டு நாணயத்தினுடைய பெறுமதி அதிகரிக்கத் தொடங்கும். எனவே வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்துவதற்காக உள்நாட்டு நாணயத்தைக் கொடுக்கும் போது அதிகளவிலே உள்நாட்டு நாணயத்தினுடைய பெறுமதி டொலருக்கு எதிராக வீழ்ச்சியடையும். வெளிநாட்டு நாணயத்தினுடைய பெறுமதி அதிகரிக்கும். இதனால் நாணயத்தின் பெறுமதியில் தேய்வு (Currency Depreciation) ஏற்படும் (Bhavan et al., 2023). உள்நாட்டு ரூபாவின் பெறுமதி தெய்வின் காரணமாக டொலரின் பெறுமதியானது 300 ரூபாவிற்கு மேல் அதிகரித்துச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை இலங்கை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. எனவேதான் 2021இல் 10.9 சதவீதமாகக் காணப்பட்ட வறுமை நிலையானது பின்னரான காலத்தில் அதிகபடியான உயர்வுக்கு சென்றிருக்கின்றது. இதனால் பல பாதக விளைவுகள் ஏற்படவே செய்துள்ளது குறிப்பாக வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு, தொழில் இழப்புகள், அத்தியாவசிய மற்றும் அடிப்படைத் தேவைகளின் குறைப்பு, அரசாங்கத்தின் சமூக நலத்திட்டங்களில் ஏற்பட்ட இழப்பு ஆகியன வறுமை நிலை ஏற்படுவதற்கு அதிகளவான பங்களிப்புச் செய்துள்ளது. இதனால் இலங்கையில் உத்தியோகபூர்வமான பணவீக்கமானது 17.5 ஆகக் காணப்பட்டாலும், உணவுப் பணவீக்கமானது 24.7 எனக் அடையாளப்படுத்தப்பட்டது. ஆக நடைமுறையில் பொருட்கள் சேவைகளின் விலைகள் 4 மடங்கு அதிகரித்திருப்பதனைக் காணக்கூடியதாக இருந்தது. வாழ்க்கைச் செலவானது 3 – 4 மடங்கு அதிகரித்தமையினையும் இணங்கானலாயிற்று.

பாரிய படுகடன் சுமையில் ஏற்பட்ட தாக்கம் :- இலங்கை யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் சீனாவினுடைய கடன் பொறிக்குள் மாட்டிக்கொண்டள்ள காட்சி நிலையினை அவதானிக்க முடிகின்றது அந்த வகையில் தான் சீனாவிடமிருந்து பெருந்தொகைக் கடன் பெற்றுள்ளது அவை அதிவேக நெடுஞ்சாலைகள், மேம்பாலங்கள், பாலங்கள், துறைமுகங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளின் உருவாக்கத்திற்காகவே இக்கடன்பெற்றுள்ளதாக அரசாங்கத்தரப்பில் அறிவிக்கப்பட்டிருந்தது. இலங்கைக்கு அதிகளவு வருமானத்தை ஈட்டித்தராத அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட மீளமுடியாப் பெருங்கடன் (Unproductive Debts). சமகால பொருளாதார நெருக்கடியில் பாரிய தாக்கத்தினையும் பாதக விளைவுகளையும் இலங்கைக்கு ஏற்படுத்தியது. உதாரணமாக : அம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தளை விமான நிலையம், தாமரைக் கோபுரம், கொழும்புத் துறைமுக நகரம் என சிலதை அடையாளப்படுத்த முடியும்.

சுற்றுலாத்துறை மற்றும் தேயிலை ஏற்றுமதியில் ஏற்பட்ட தாக்கம் :- உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய இரண்டும் இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு முக்கியமான சந்தைகளாக இருப்பதனால், ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான யுத்தம் அதிகரித்ததானது இலங்கைக்கு பின்விளைவுகளை ஏற்படுத்தியது. இந்த வருடம்

பெப்ரவரி 11ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளில் ரஷ்யர்கள் மட்டும் 15.8 வீதமாகவும், உக்ரேனியர்கள் 8.7 வீதமாகவும் காணப்பட்டனர். ஆனால் இரு நாடுகளுக்குமிடையில் யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்தமை நாட்டின் சுற்றுலாத்துறை வருவாயில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது. இவையும் இலங்கையின் சமகாலப் பொருளாதார நெருக்கடிக்கான முக்கிய காரணங்களாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன (Bhavan et al., 2023). அந்த வகையில் இந்த நாட்களின் யுத்த நிலையினால் எல்லைகள் மூடப்பட்டதால், சுற்றுலாப் பயணிகள் வருவதை முற்றிலுமாக நிறுத்திவிட்டனர். இதன் விளைவாக சுற்றுலா தொடர்பான வருவாய் குறைகிறது. இலங்கையின் சுற்றுலாத்துறையானது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீத பங்களிப்பை வழங்குகிறது. சுற்றுலாப் பயணிகளும் அந்நியச் செலாவணிக்கு ஆதாரமாக உள்ளனர். 2020 ஆம் ஆண்டில், இலங்கை 2018 ஆம் ஆண்டில் வெறும் 173,000 சுற்றுலாப் பயணிகளை வரவேற்க முடிந்தது. எண்ணிக்கை 2.3 மில்லியன். 2021 இல் இலங்கையின் சுற்றுலா வருமானம் 2.8 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்துள்ளது (Hovan George et al, 2022). அதிலும் குறிப்பாக ரஷ்ய-உக்ரேனியப் போரினால் தேயிலை ஏற்றுமதியும் சுற்றுலாவும் அதிகமாக பாதிக்கப்பட்டது. இலங்கை தேயிலை ஏற்றுமதியில் இரண்டாவது பெரிய சந்தையாக ர~;யா இருப்பதால், இலங்கை மேலும் பொருளாதார நெருக்கடியை சந்தித்தது. ஆகவே இலங்கையின் சுற்றுலாத் துறையானது இந்த இரண்டு நாடுகளையும் சார்ந்துள்ளது என்பது புலனாகின்றது ஏனெனில் பெரும்பாலான சுற்றுலாத்துறையினர் ரஷ்யா அல்லது உக்ரைனில் இருந்து வருகின்றனர். அண்மையில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார நெருக்கடியினால் தேயிலை மற்றும் சுற்றுலாத் துறைகள் ஆகிய இரண்டும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

## பரிந்துரைகள்

• இலங்கை பொதுவாக தன்னுடைய ரூபாயின் பெறுமதியை இழந்துக்கொண்டிருக்கின்றது. ஆகவே பாரிய முதலீடுகள், சர்வதேச நாடுகளின் உதவிகள் அல்லது நன்கொடைகள் கிடைப்பதன் மூலமாக இந்த நிலைமையிலிருந்து மீளலாம். எடுத்துக்காட்டாக: சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி முதலியவற்றினை இலங்கை அணுகிக்கொள்ளுதல்.

• டொலரின் பெறுமதி குறைத்து ரூபாவின் பெறுமதியை அதிகரிப்பதற்கான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதுடன் புதிய நாணயங்களை அச்சிட்டு மத்தியவங்கி வெளியிடுவதனை நிறுத்திக்கொள்ளுதல் வேண்டும் இதன் மூலமாக பணவீக்கத்தினை குறைத்துக்கொள்ள முடியும்.

• சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோருவதற்கான செயற்பாட்டை துரிதப்படுத்துவதோடு அரசியல் உறுதித்தன்மையை ஏற்படுத்தலும் ஊழலை இல்லாதொழித்தலும் அவசியமாகும்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR

- சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் இலங்கையில் சீர்திருத்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் என்ற நம்பிக்கையை சர்வதேச சமூகத்தினுள் காணப்படுவதால் அது தொடர்பாகவும் கவனம் செலுத்த முடியும்.
- அரச செலவீனங்களை குறைத்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதாவது அரசாங்கத்தால் ஓரளவிற்கு கட்டுப்படுத்தக்கூடிய செலவினங்கள் மற்றும் பொதுத்துறையின் சம்பளம் மற்றும் ஊதியங்களை வரையறுத்தல்.
- தொழிலாளர்களின் பெரும்பகுதியாகிய ஏழைமக்களுக்கு சமூக நலன்புரி திட்டங்கள் அல்லது ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும்.
- இலங்கையின் சுற்றுலாத் துறையை வலுப்படுத்துவதற்காக செயற்பாடுகளை துரிதப்படுத்தல் வேண்டும். வர்த்தக சமூகம், வெளிநாட்டு நேரடி முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாட்டு நன்கொடையாளர்களிடையே நம்பிக்கை உருவாக்கப்பட்டு கவர்ச்சிகரமான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தும் போது அவை பெரும்பாலான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வழிவகுக்கும்.
- சுற்றுலாத்துறையினை விருத்திக்கான வழிகளை ஏற்படுத்தவதுடன் சுற்றுலாப்பயணிகளை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளையும் அவர்களின் கவனத்தினை ஈர்ப்பதற்கான வேலைத்திட்டங்களை சுற்றுலாத்துறை அமைச்சோடு இணைந்து மேற்கொள்ளுதல்.
- இலங்கையானது தனித்துப் பொருட்களை உற்பத்தி செய்யாமல் எல்லா நாடுகளின் பங்களிப்புடனும் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும்.
- சமகால இலங்கையின் வரிமுறைமையில் வினைத்திறனை கூட்டுவதற்காக ஊழலினை குறைத்தல், அரசாங்கத்தின் உறுதித்தன்மை பேணப்படுதல், அரசாங்கத்தின் வெளிப்படுதன்மை பேணப்படுதல் முதலிய ஜனநாயக பண்புகளில் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும்.
- அரச வருமானங்களை விட இறக்குமதிக்காக செலவு அதிகரித்தமை அந்நிய செலாவணி கையிருப்பு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. எனவே அரசாங்கம் இறக்குமதி செலவினத்தை குறைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இலங்கையின் பொருளாதாரத்தில் சேவைத் துறையானது முன்னணியில் இருந்தாலும் சேவைத்துறையை வர்த்தகம் செய்தல் என்பதில் இலங்கை அதிகளவு கவனம் செலுத்தாமலுள்ளது. ஏனைய துறைகளை விட சேவைத் துறையில் இன்னும் பல வசதிகளை ஏற்படுத்தி ஊக்குவிப்பு வழங்குதல் வேண்டும்.
- உள்நாட்டு வரி வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்களை மேற்கொள்ளுதல் குறிப்பாக வரிகளை அதிகரிப்பதனூடாக வரி வருவாயை அதிகரிக்க முடியும். உதாரணமாக : விரிவுரையாளர்கள், வைத்தியர்கள் போன்றவர்களிடம் வரியை அதிகரித்தல்.
- விவசாயத்துறையில் நவீன தொழில்நுட்பத்தின் கையாளுகையை ஊக்குவித்தல், மண்வளத்தைப் பாதுகாத்தல், விவசாயிகளிடையே நவீன தொழில்நுட்பம் சார் அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்தல், அறுவடைசார்

தொழில்நுட்பங்களை முன்னேற்றுதல், உற்பத்திகளைப் பன்முகப்படுத்துதல், சந்தைசார் தகவல்களைப் பெற்றுக்கொடுத்தலும் சந்தையை விரிவுபடுத்துதலும், நீர்பாசனத்தில் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தை உத்திகளைக் கையாளுதல், சேமிப்பினை ஊக்குவிக்கும் வகையில் வட்டி வீதங்களைக் கூட்டுதல் மற்றும் சிறந்த முதலீட்டு ஆலோசனைச் சேவைகளை வழங்கல் போன்ற உபாயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

• இலங்கையில் பாரிய பொதுபடு கடன் அதிகரிப்பு நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு தடையாகும். எனவே பொதுபடு கடன் குறைப்பதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுதல். அத்துடன் வெளிநாட்டு பணம் அனுப்புனர்களின் வரவை மேம்படுத்துதல் வேண்டும்.

## முடிவுரை

2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவின் வெற்றியின் பின்னர் நெருக்கடி மிக்க நிலையில் நாடு இருந்தபோது மேலும் நெருக்கடியை ஏற்படுத்தக் கூடிய தீமானங்கள் எடுக்கப்பட்டது. உதாரணமாக, இரசாயனப் பசளை இறக்குமதியை நிறுத்தி இயற்கை விவசாயத்தை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி விடுத்த அறிவித்தல், அந்நியச் செலாவணி வெளிச் செல்வதைத் தடுப்பதற்கான சில பிழையான தீர்மானங்கள், கொரோனாவினால் மரணித்த முஸ்லிம்களின் உடல்களை எரிப்பதற்கு எடுத்த தீர்மானம் முதலியன நாட்டுக்கு மிகவும் பாதகமான நிலைமையை ஏற்படுத்தியது. இதன் தொடர் இறுதியில் மக்கள் போராட்டத்தின் மூலம் ஆட்சி கவிழ்ப்பு ஏற்பட காரணமாகவும் இருந்தது. மேலும், இலங்கையின் அரசியல் பொருளாதார நெருக்கடியினால் மக்கள் பல சவால்களை எதிர்கொண்டனர். அதாவது இலங்கை நெருக்கடியின் தாக்கங்கள் அத்தியவசிய பொருட்களின் விலை உயர்வு மற்றும் பற்றாக்குறை, மின்தடைகள், ஜனாதிபதி தேசிய அவசரநிலையை அறிவிப்பு, வரிக் குறைப்புக்கள் மற்றும் கோவிட்-19 பரவல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டது. இது நாட்டின் இலாபகரமான சுற்றுலாத் துறை மற்றும் வெளிநாட்டுப் பணப் பரிமாற்றங்களை மோசமாகப் பாதித்தது. இறக்குமதித் தடைவிதித்தல் மற்றும் விலையேற்றமும் காரணமாக மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு அதிகமான மக்கள் பசி பட்டினியால் வாடினர் இதனால் வறுமை நிலை அதிகரித்தது, வன்முறை சம்பவங்கள் அதிகரித்தமை, மின்சாரம் மற்றும் எரிபொருள் பற்றாக்குறை, சமையல் எரிவாயு பாவனையில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. பெட்ரோல் நிலையங்களுக்கு முன் நீண்ட வரிசைகள் உருவாகியது, கச்சா எண்ணெய் விலை உயர்வு நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. மின்சாரத்தை சேமிப்பதற்காக நாடு முழுவதும் தினசரி மின்வெட்டை விதித்தமை, காகிதத் தட்டுப்பாடு மற்றும் காகிதத்தின் விலை உயர்வு காரணமாக தினசரி செய்தித்தாள்களின் தட்டுப்பாடு போன்ற பல சவால்களும் மக்கள் போராட்டத்திற்கு காரணமாக இருந்தது மேலே கூறப்பட்ட விடயங்களினால் இலங்கையின் அரசியல், மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் மாத்திரமன்றி மக்களின் வாழ்க்கைத்தரம்


© 2024, IRJTSR

மற்றும் அவர்களது வாழ்க்கை முறைமைகள் அனைத்துமே ஒரு மோசமான நிலைக்கு தள்ளப்பட்டு செல்வதையும் அவதானிக்கலாம். எனவேதான இச்சூழ்நிலைகளை நிவர்த்தி செய்வதற்கான உலக நாடுகளிடம் உதவி பெறுதல், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மற்றும் ஆலோகனைகளை வேண்டுதல், கடன் பெற்ற உலக நாடுகளுடன் கடன் மறுசீரமைப்பு செய்தல், வரி வருமானத்தை அதிகரித்தல், வாழ்க்கை செலவை கட்டுப்படுத்தல், வர்த்தக நடவடிக்கைகள் முடங்குவதை தவிர்த்தல், மனித உரிமையை பாதுகாத்தல், தேர்தல் நடத்துதல், எதிர்ப்புக்களை கட்டுப்படுத்தல் உள்ளிட்ட பல செயற்திட்டங்களை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். ஆகவே, இந்த நெருக்கடியினை தீர்க்க உலக நாடுகளின் உதவிகள் இலங்கையினை பொருத்தமட்டில் மிக முக்கியமானதாக நோக்கப்படுகின்றது. குறிப்பாக சீனா, இந்தியா, ஜப்பான், மாலைதீவு, பாக்கிஸ்தான் நிபந்தனைகளுடனான உதவிகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் தள்ளப்பட்டுள்ளது. இந்நிலையிலிருந்து இலங்கை மீள வேண்டுமாயின் சர்வதேச நாடுகளின் உதவி அவசியமாகும். ஆதலால் தற்போது இலங்கையில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடியினை ஆழமான விவாதத்திற்கு உட்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகின்றது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியானது தனித் ஒரு காரணத்தினால் மாத்திரமன்றி பல்வேறு காரணிகளின் தொடர்ச்சியான ஒரு கூட்டுக் கலவையால் உருவானது அதிலும் அரசியல் பொருளாதார தாக்கம் பிரதானமானதாக நோக்கப்படுகின்றது. இருப்பினும் இந்த நெருக்கடி தீவிரமடைந்துள்ளபோதிலும் அவற்றை முகாமைசெய்வதற்கான முன்வைக்கப்பட்ட சாத்தியமான ஆலோசனைகளை கவனம் செலுத்தி நடைமுறைப்படுத்துவதன் மூலமாக தற்போதைய நெருக்கடி நிலைமையினை குறைப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கமுடியும்.

## உசாத்துணைகள்


[1] அருண்பிரசாத் .ர, (3 செப்டெம்பர, 2022). இலங்கை பொருளாதார நெருக்கடி எப்படி முடிவுக்கு வரும்? - 5 வாய்ப்புகள். Retrieved from : https://www.bbc.com/tamil/sri-lanka-60886261

[2] அருஞ்சொல். ( 2022). இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு என்ன காரணம். Retrieved from : https://www.tnpscthervupettagam.com/articles-detail/%E0%AE%87%E0%AE%B2%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D-%E0%AE%AA%E0%AF%8A%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B3%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%BE%E0%AE%B0-%E0%AE%A8%E0%AF%86%E0%AE%B0%E0%AF%81%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81-%E0%AE%8E%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%A9-%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A3%E0%AE%AE%E0%AF%8D

[3] Bhavan T., Arulanandem K., Ganeshamoorthy M., Ravinthirakumaran N., Vijayakumar S., Sivanathan V.P., Jeyarajah S., Arulanandem K., Premakumar K., Sivesan S., Vijesandiran S., Maheswaranathan S., Karunaanithy K., Geretharan T., Jegajeevan S., (2023). இலங்கையின் சமகால பொருளாதார நெருக்கடி, பொருளியல் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. Retrieved from : https://www.fcm.esn.ac.lk/sites/default/files/2023-05/Contemporary_Issues_in_Sri_Lanka_26_05_2023.pdf

[4] BBC NEWS. (நவம்பர், 2022). இலங்கையில் பொருளாதார நெருக்கடி வந்தது ஏன் - முழு விளக்கம். Retrieved from : https://www.bbc.com/tamil/sri-lanka-60797162

[5] Fowsar., A.M.M., Kumaresan Raja. N.K., Rameez. A.M.M., (2022). COVID-19 Pandemic Crisis Management in Sri Lanka: Slipping Away From Success. Retrieved from : (PDF) COVID-19 Pandemic Crisis Management in Sri Lanka. Slipping away from Success (researchgate.net)

[6] Hovan George A.S., Shaji George A., T. Baskar. (2022). Sri Lanka's Economic Crisis: A Brief Overview, Partners Universal International Research Journal (PUIRJ) Volume: 01 Issue: 02

[7] Ivan. V, (2022). More about the solution for Sri Lanka’s current crisis. Retrieved from : https://www.ft.lk/columns/More-about-the-solutionfor-Sri-Lanka-s-current-crisis/4-732851

[8] Rafi.T and Abeyratnealal. S. (2022). How Sri Lanka Can Overcome Its Economic Crisis. Retrieved from : https://www.bing.com/ck/a?!&&p=57a87de00a781797JmltdHM9MTcxMTc1NjgwMCZpZ3VpZD0zYjQyY2Q1NC03MjlmLTY0NmUtMTk0OC1kY2FiNzM5ZTY1YWUmaW5zaWQ9NTE4NA&ptn=3&ver=2&hsh=3&fclid=3b42cd54-729f-646e-1948-dcab739e65ae&psq=Rafi.T+and+Abeyratnealal.+S.+(2022).+How+Sri+Lanka+Can+Overcome+Its+Economic+Crisis%3f&u=a1aHR0cHM6Ly90aGVkaXBsb21hdC5jb20vMjAyMi8wOC9ob3ctc3JpLWxhbmthLWNhbi1vdmVyY29tZS1pdHMtZWNvbm9taWMtY3Jpc2lzLw&ntb=1

[9] Gunasekara, V. (2021), Crises in the Sri Lankan Economy: Need for National Planning and Political Stability. Retrieved from : https://www.isas.nus.edu.sg/papers/crises-in-the-sri

[10] சறோஜினி . ம ( 22 ஆயுலு, 2022) சமகால பொருளாதார நெருக்கடியும் தீர்வுகளும் Retrieved from : https://www.virakesari.lk/article/127959

[11] ஜெகான் பெரேரா. (2022). மக்கள் கிளர்ச்சி போராட்டக்காரர்களுடன் அரசியல் தொடர்பாடல் அவசியம். Retrieved from : https://www.virakesari.lk/article/131726